முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மாணிக்கவாசகர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.10.2018, வியாழக்கிழமை

1. **ஆனந்த ஞான வழி காட்டும்**
**அண்ணலே அரங்கமகாராசனே**
**ஞானயுகம் படைக்க வேண்டி**
**ஞானியாக வந்த வள்ளலே**
2. வள்ளலே உன் பெருமை கூறி
வகைபட ஒளி சூட்சும நூலை
வல்லமைபட **விளம்பி துலை திங்கள்**
**வழங்குவேன் ஏக திகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 1ம் நாள் 18.10.2018, வியாழக்கிழமை)**
3. வாரமதில் மாணிக்கவாசகர் யானும்
வழுத்திடுவேன் உலகோர் நலம் பெற
சோரமிலா ஞானமக்களை உருவாக்க
சுத்தநெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் சொல் செயலனைத்தும்
ஆறுமுகன் ஆற்றலாக இருக்க
வரங்கள் பெற்று உயர
வர வேணும் அரங்கன் குடிலுக்கு
5. குடிலெனும் ஏழாம் படை வீட்டை
குவலயத்தில் கண்டு வணங்கிட
இடர்களெல்லாம் விலகி ஓடியே
ஏற்றமதும் பலவழிகளில் ஓங்கும்
6. ஓங்கார ஆசான் அரங்கன்
உண்மை பொருள் கண்ட ஞானி
ஓங்கார சக்தியை அடைய
உலகோரே முழுமதி காலம் தோறும்
7. தோறும் அவசியம் வந்தடைந்து
தொடர் பூசை கலந்து ஆசி
வருமுலகில் வழிபாட்டை பெருக்க
வரங்களுடன் பல சூட்சும சக்தி
8. சக்தி கிட்டி சிறப்பு காண்பர்
சற்குருவாய் சகலருக்கும் வழி
பக்திக்குரிய சித்தி வழி காட்டி
பாமரரையும் தேற்றி வருக

9. வருகவே அரங்க ஞானிக்குள்
வடிவேலனார் அகத்தியருடன்
பெருமைபட மாணிக்கவாசகரும்
பெருஞ்சக்தியாக உடன் இருக்க

10. இருக்கவே கலிகாலம் எனும்
இடர்காலம் சடுதி விலகும்
கருத்தான ஞானிகள் பலமிக்க
கந்தவேலனின் ஞானயுக காலம்

11. காலம் கனிந்து பேருலகே
காப்பும் சிறப்பும் காணும்
வாழையடி வாழையாக ஞானிகள்
வள்ளல் அரங்கன் வழி உருவாகுவார் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மாணிக்கவாசகர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

பேரின்ப நிலையான ஆனந்த ஞான வழிதனை மக்களுக்கு உபதேசித்து அதை அடையும் வழிமுறையும் வழிவகையும் தந்து காக்கும் அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் இன்று உள்ள துன்பம்மிக்க கலியுகத்தினை மாற்றி கலியுக மாமாயையிலிருந்து மக்களை மீட்டு அறிவு சுடர் மிகும் ஞானம்மிக்க ஞானயுகத்தினை படைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே வள்ளல் ஞானியே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 1ம் நாள் 18.10.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மாணிக்கவாசகர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மாணிக்கவாசகர்.

குற்றமற்ற மேன்மைமிக்க ஞானமக்களை உலகினில் உருவாக்கிட அவர்களுக்கு தூயநெறியினை அளித்து எளிமை ஞானம் உபதேசித்து அவர்களை வழிநடத்தி காக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சொல் செயலனைத்தும் முருகப்பெருமானின் ஆற்றலாக இருக்கின்றபடியினாலே உலக மக்களே நீங்கள் உங்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள வரங்கள் பெற்று நிலை உயர்ந்திட உடன் விரைந்து வாருங்கள் துறையூர் ஓங்காரக்குடிலிற்கு.

ஏழாம் படை வீடாய் முருகப்பெருமானால் நிர்மாணிக்கப்பட்ட ஓங்காரக்குடிலினை உலகினர் கண்டு பயபக்தியுடன் வணங்கிட அவர்களது துன்பமெல்லாம் விலகி ஓடிடும். அவர்களது வாழ்வினில் பலபல முன்னேற்றங்கள் உருவாகிடும்.

**ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்கமகா தேசிகன் உண்மைப் பொருளை அறிந்து வெற்றி கண்ட மகா ஞானி ஆவார்.**

ஓங்கார சக்தியினை அடைய வேண்டுமாயின், அடைய விரும்புகின்றவர் எல்லாம் ஓங்காரக்குடிலினில் உலக நலன் கருதி அரங்கன் நடத்தும் சிறப்பு ஞான வழிபாடுகளாம் பௌர்ணமிதோறும் நடத்தும் சிறப்பு ஞானபூஜைகளில் தவறாமல் கலந்து கொண்டு அவரவரின் வீட்டிலும் ஜோதி வழிபாட்டினை தொடர்ந்து செய்து வர வேண்டும். இவ்விதமே அரங்கனின் தூயநெறி நின்று ஜோதி வழிபாடுகளை தவறாமல் செய்து வர அவர்களுக்கு அரங்கன் அருளினால் வரங்களுடன் பலவிதமான சூட்சும சக்திகளும் வந்தடையும், சிறப்புமிக்க நல்வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்க ஞானியே முழுமை ஞானம் பெற்ற சற்குரு ஆவார். சற்குருவான அரங்கன் தம்மை நம்பிய சகலவிதமானவர்களுக்கும் குருவாய் நின்று பக்திக்குரிய வழியைக் காட்டியும் சித்தியடையும் வழியைக் காட்டியும் கல்வியறிவு இல்லாத பாமர மக்களையும் கடைத்தேற்றி வருகின்றார்.

சற்குருவான அரங்கனுக்குள் முருகப்பெருமான் சார்ந்துள்ளதோடு, அகத்திய மகரிஷியும் சார்ந்துள்ளார், பெருமையுடன் கூறுகிறேன் மாணிக்கவாசகன் யானும் அரங்கனுள் பெரும் சக்தியாக சார்ந்து இருக்கின்றேனப்பா.

ஆதலினால் உலகினில் கலிகாலம் என்கிற துன்பம்மிக்க காலம் விரைந்து விலகிடுமப்பா. கருத்துமிக்க ஞானிகள் பலம்மிக்க முருகப்பெருமானின் ஞானயுக காலம் விரைந்து உலகினில் உண்டாகி இந்த பேருலகமே அருள்பாதுகாப்பும் சிறப்பையும் பெற்றிடும்.

வாழையடிவாழையாக இவ்வுலகினில் குருசீட பாரம்பரியமாக ஞானிகள் வள்ளல் அரங்கமகா தேசிகனார் மூலமாக உருவாகிடுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மாணிக்கவாசகர்.

–சுபம்–